தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உயஎக	மலர்
சரு	சௌமிய, மாசி	கக
	(1970 — பிப்ரவரி — மார்ச்சு)	

பாரதிதாசனாரின் ஏற்றப்பாட்டு.

திரு. சாலை. இளந்திரையன்.

இன்பம் ஊட்டுவது, எண்ணம் ஊட்டுவது, செயலுக்குத் தூண்டுவது என்னும் மூன்றுமே கலையின் பணிகள். இவற்றுள் ஏதாவது ஒன்றையோ இரண்டையோ மட்டும் பற்றிக்கொண்டு. மற்றவற்றைப் புறக்கணிப்பது சிலரின் வழக்கமாக இருக்கிறது. அவர்கள், "கவிதை என்றால் இன்பம் (அதுவும் கள்வெறியால் உண்டாவது போன்ற மயக்க இன்பம்) மட்டுமே தரவேண்டும்" என்கிறார்கள். இத்தகைய இன்பத்துக்கே கவிதையைப் பயன் படுத்திய இடைக்காலத் தமிழர்கள் என்னென்ன இழப்புகளுக்கு ஆளானார்கள் என்பதைத் தமிழக வரலாறு எடுத்து இயம்பிக் கொண்டிருக்கிறது. சமுதாய நினைவே இல்லாதவர்களாக, வெறும் சதை நினைவே உடையவர்களாக மாற்றப்பட்ட அவர்கள் உரிமையை இழந்தார்கள்; அதைத் தொடர்ந்து. தங்கள் பெருமையை எல்லாம் இழந்தார்கள்.

சமுதாயப் பாட்டு.

இந்தக் கொடு வரலாற்றை மாற்ற எழுந்த பாரதிதாசனின் கவிதைகளிலே படிக்க இன்பம், நினைக்க ஒரு சமுதாய எண்ணம், செயலுக்கு ஓர் உந்துதல் என்னும் மூன்றும் போட்டி போட்டுக் கொண்டு பொங்கித் ததும்புவதைப் பார்க்கிறோம். இரண்டை அமுக்கி ('இன்பம்' என்னும்) ஒன்றே எழுந்து நிற்கும் இடைக் காலப் பாடல்களில் பழகியவர்கள், "பாரதிதாசனின் கவிதை களில் கவிதைத் தன்மையைவிடப் பிரச்சார முனைப்பே அதிகம்" என்று சொல்லித் தம்மை ஏய்ப்பதோடு, பிறரையும் ஏய்க்கப் பார்க்கிறார்கள்.

மனிதன் சமுதாயத்தின் ஒரு கூறு என்றும் அவனுடைய கடமை என்பது சமுதாய நலம் தழுவிய செயல் முறையே என்றும்

அவனுக்கு நினைவூட்டும் கலைகளே உண்மையான கலைகள். மனிதனைச் சமுதாயத்திலிருந்து தனிப்பிரிக்கும் வகையில், அவனுக்கு என்று தனியே சில இன்பங்கள் இருப்பது போலக் காட்டுவன எல்லாம் போலிகளே. இந்த உண்மையை உணராதபடி மக்களைத் திசைத்திருப்புவோரின் எதிரே, துணிவுமிக்க அறைகூவலாக எழுந்து நிற்கின்றன பாரதிதாசனின் கவிதைகள்.

ஏற்றப்பாட்டு.

ஏற்றப்பாட்டு என்பது பாரதிதாசனின் பாடல்களிலே ஒன்று. இருநூறு கண்ணிகளால் ஆன இப்பாடலில் பாரதிதாசனின் வாழ்க்கை நோக்கு இனிக்க இனிக்க எழிலோவியம் ஆகியுள்ளது. இருபதாம் நூற்றாண்டுத் தமிழகத்தில் எழும் ஒரு பாட்டு எப்படி எப்படி அமையவேண்டும் என்பதற்கு இலக்கியமாக உருவாகியுள்ளது ஏற்றப் பாட்டு.

உலகுக்கு ஒளியும் வளர்ச்சியும் தருகின்ற கதிரவனை வாழ்த்தித் தொடங்குகிறது பாட்டு :

> "மாங்கனியும் நீதான்—அந்த
> வானமென்னும் தோப்பில்."

சுவையான இந்தக் கற்பனையோடேயே, "முந்திய கருக்கல் எந்த மூலையிலும் இல்லை, சந்து பொந்தில் எல்லாம் உன் தங்க வெய்யில் கண்டோம்" என்னும் மகிழ்வுச் செய்தியும் வருகிறது.

இந்த நாடு.

பலவகையான இருள்கள் நாட்டைச் சூழ்ந்திருக்கின்றன, அவை விலகுவதற்கான எழுச்சியும் தோன்றிவருகிறது" என்னும் செய்தி இப்பகுதியில் குறிப்பாக உணர்த்தப்படுகிறது. இதனாலேயே, கதிரவன் வாழ்த்தைத் தொடர்ந்து நாட்டுச்சிறப்பு ஓதப்படுகிறது. இந்த நாட்டை ஆண்டிருந்த பாண்டியனின் பேரைச் சொன்னால் உலகமே நடுங்குகிறது இந்த நாட்டில் ஓடும் காவிரி வெறும் தண்ணீர் ஆறு அல்ல; அது இங்கே வளர்ந்து செழித்த கருமபின் சாறு. கடலிலே முத்து, மலையிலே அகில், நிலப்பரப்பிலே வளம். இவைகளால் அயல் நாட்டு வாணிபமும் செழிக்கிறது. செழிக்கவே,

> "எட்டுத்திசை பாடும்—நம்
> இன்பத் திருநாட்டை."

வெளிப்புகழால் மட்டுமே ஒரு நாடு சிறந்துவிடுமா?—உள் நாட்டுக்கும் உவகை கொழிக்க வேண்டாமா? அதுவும் கிடைக்கிறது இங்கே; மலைபோன்ற பால் மாடுகள், மணம் கமழும் சந்தனக் குன்றங்கள், தெங்கின் இளநீர்போல் சரியும் அருவிகள், தோட்டங்களில் எல்லாம் தோகை விரித்து ஆடும் மயில்கள்,-பூ விரியும் சோலைகள்; பொன் கொழிக்கும் நன்செய் வயல்கள், இவை எல்லாம் உள்ள இந்த நாட்டில் கடுங்கோடையும் உண்டு; ஆனால், அதை அவித்து மட்டுப்படுத்தும் தென்றலும் இங்கே எழுகிறது:

"வேகவைக்கும் கோடை—அதை
விழுந்தவிக்கும் தென்றல்."

இவ்வளவு செழிப்புகளுக்கும் சீர்களுக்கும் உரிமை பெற்ற நாட்டில் சாதி வந்தது: மதம் எழுந்தது: அவை இரண்டால், நாட்டின் பெருமை விழுந்தது. வாழ்வின் ஒவ்வொரு கூறும் பழைய தெளிவை இழந்து கலங்கி நிற்கிறது. நிற்கவே, நாட்டின் உண்மைத் தோற்றம் எங்கும் எதிலும் தெளிவாகக் காணப்படவில்லை.

அறம்.

'இந்த நிலை மாறி, நாட்டின் பழைய நிலை, புதிய பொலிவோடு துலங்கவேண்டாமா? வேண்டும் என்றால், தனி மனிதனுக்கும் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் என்னென்ன இயல்புகள் ஊட்டப்பட வேண்டும்?' இவைகளை வரிசையாக நினைவூட்டுகிறது பாட்டு:

உண்மை கண்ட நாட்டில் ஒரு கடவுள் உண்டு; அதற்கு உருவமோ பெண்டு பிள்ளைகளோ இல்லை, தேரும் திருவிழாவும் இல்லை; அதன் பெயரால் சின்னங்கள் பூண்டு, மக்கள் கூட்டம், சின்னபின்னம் ஆவதும் இல்லை. உண்மை உணர்ந்தோர்க்கு ஒரு மதமும் வேண்டாம். "பெருமதங்கள் என்னும் அந்தப்பேய் பிடிக்கவேண்டாம்."

ஏற்கனவே பிடித்துள்ள (மதமான) பேயை விரட்டி நற்றிசையில் நடை தொடங்குவது எப்படி? அந்தப் பேயே கண்டு அஞ்சி ஓடக்கூடிய விளக்கு (வெளிச்சம்) ஒன்று இருக்கிறது: அதுதான் பகுத்தறிவு என்னும் பச்சை விளக்கு.

"பச்சை விளக்காலே—நல்ல
பாதைபிடி தம்பி."

என்று வழிகாட்டும் கவிஞர். அப்பாதையில் நாம் செல்ல வேண்டிய முறையையும் சென்று அடையவேண்டிய இடத்தையும் மறவாமல் சுட்டிக்காட்டுகிறார்:

"ஊர்க்குழைக்க வேண்டும்—நீ
உண்மையுடன் தம்பி."

ஒருவன் தன் வீட்டுக்கும் தன் நாட்டுக்கும் உழைக்கவேண்டும். ஆனால், அவைகளை உயர்த்தும் முயற்சியில், உலகத்தை மறந்துவிடவோ அப்பெருங் குடும்பத்தில் தனக்கு உள்ள உரிமையை இழந்துவிடவோ கூடாது.

"நாட்டுக்கு உழைதம்பி—இந்த
ஞாலத்தை எண்ணி."

அந்த எண்ணத்தோடு உழைத்து வந்தால்தான், "தேட்டம் பொது,—இந்தச் சீமை பொது" என்னும் நிலைமை இங்கே உருவாக முடியும்.

கடமையுடனேயே தமிழனுக்கு மற்றொன்றும் நினைவு வரும்; அதுதான் காதல். காதல் இல்லாத வாழ்க்கை வறண்ட வாழ்க்கை; அதிலே பெறுவதாக நாம் எண்ணிக்கொள்ளும் இன்பமும் பசையற்ற இன்பமே. தண்டவாளத்தின் இரட்டைக் கம்பிகள் போல், காதலும் கடமையும் இணங்கிச் செல்லவேண்டும் என்பது தமிழன் கொள்கை. அதுவே மனிதக் குலத்தின் கொள்கையாக வேண்டும் என்பதும் அவன் எண்ணம்.

உழைப்பைப்பற்றிப் பேசிக்கொண்டு வரும் கவிஞருக்கு, அதைவிட்டுப் பிரியாத காதலின் நினைவு வந்துவிடுகிறது; கவிதையிலும் ஒரு சுறுசுறுப்பு ஊடாடுகிறது.

"கண்ணடித்து அழைக்கும்—ஒரு
கட்டழகி தன்னை
எண்ணம் ஒத்திருந்தால்
ஏற்றுக்கொள்ள வேண்டும்."

இதுவரை தம்பியிடம் பேசிவந்த கவிஞர், கட்டழகியையும் அவனையும் பேசவிட்டுவிட்டு ஒதுங்கிக் கொள்ளுகிறார்; ஓர் ஆணும் ஒரு பெண்ணும் இணங்கி வரும்போது அங்கே மற்றவர்களுக்கு வேலை இல்லை; அவர்களே தங்கள் வாழ்வையும் கடமையையும் வகுத்துக்கொள்ளுவார்கள். எனவே, அந்தக் காளையே பேசுகிறான்:

இது புதுமையுகம். 'வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர்கள்' பெரும்பாலும் முடிந்து போய்விட்டார்கள்; வீட்டுக் கடமையே பெண்ணுக்கு உரியது என்னும் இடைக்கால வரையறுப்பு நொறுங்கி வருகிறது. கணவனோடும் தனியாகவும், பொதுக் கடமைகளில் பெண்கள் ஈடுபட வேண்டிய காலம் வந்துவிட்டது. இந்த நிலைக்கேற்ப அவளுக்கு,—தன் அத்தை மகளுக்கு,—வழிகாட்டுகிறான் அவன்:

"தனித்து வரும்போது—கெட்ட
தறுதலை கண்வைத்தால்
இனிக்கநலம் கூறு—பெண்ணே
இல்லாவிடில் தாக்கு."

இனிக்க இனிக்க நலம் கூறி நல்வழி காட்டியும் அந்தத் தறுதலை கேட்காவிட்டால், அடித்து அறிவூட்ட வேண்டும்; அதையும் பெண்ணே செய்யவேண்டும். மதமான பேயிடம் அகப்படாத பெண் இப்படிச் செய்ய முடியும் என்பது கவிஞர் கருத்து.

பொருள்.

தம்பிக்கு அறம் சொல்லித் தொடங்கிய ஏற்றப்பாட்டு, இங்கே பொருள் (பொதுவாழ்வு) பற்றிப் பேசுகிறது; கள் வேண்டாம் என்று அரசு சட்டம் செய்தது. "கள்ளை விட்ட பேர்க்குப் பெண்ணே. கைப்பணமும் மீதி. என்று அதைப் பாராட்டும் கவிஞர், கள்ளுக்கடையை ஒழித்துவிட்டு அரசாங்கம் கள்ளக் கடைக்கு வழிவிட்டு விட்டதே' என்று வருந்துகிறார். இது போல். ஒரு குறையை அடைத்து மறு குறையைத் திறக்கிறார்களே, ஏன்? நல்லவர்களும் தகுதி வாய்ந்தவர்களும் ஆட்சி புரிந்தால் இந்தக் கேடு ஏற்படாது. நாடாள வந்திருக்கின்றவர்களோ?....

"ஆளவந்தார் உண்டு—பெண்ணே
அய்யோ, பெரும் மண்டு."

மண்டுகள் என்றால் ஒன்றும் தெரியாதவர்களல்ல; சுயநலம் பேணுவதிலே அவர்கள் புலிகள். காசுப்புலிகளாக இருப்பதனாலேயே, அவர்களால் காரியப்புலிகளாக இருக்க முடியவில்லை. 'தோளிலே மிடுக்காம்,—அவர் தொழுவதோ வடக்காம்.' தன் னலமே குறிக்கோள் என்று கொண்டவன் யாருக்கும் பணிந்து போகவேண்டும்? அப்படிப் போகிறவனின் ஆட்சியிலே

வள்ளுவன் வகுத்த பொருளியல் என்னும் அறநெறி அரசியல் செழிக்க முடியுமா ?

இன்பம்.

நாட்டு நிலையை நினைவூட்டிய கையோடேயே, அவள்மீது தனக்குள்ள ஈடுபாட்டையும் விவரிக்கிறான். 'காதல் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவுபட்டால்'தானே, அவர்கள், நாட்டுப் பணியிலும் உலக நலத் தொண்டுகளிலும் ஈடுபட முடியும் ? அவள் நெஞ்சம் தன்பால் ஈடுபட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறவன்போல. 'கருத்தை உரை கொஞ்சம்' என்று கெஞ்சு கிறான். அவள் வாயால் பதில் சொல்லவில்லை ; அவள் குறிப்பை உணராத காளை, 'கல்லடி உன் நெஞ்சம்' என்று துடிக்கிறான். அண்மையில் பார்க்கிறான் ; அங்கே கண்ட காட்சி அவனை மேலும் துடிக்கச் செய்கிறது.

"பார் இரண்டு சிட்டு — பெண்ணே
பழகும் ஒன்றுபட்டு."

அவள்மீது தனக்குள்ள காதலை அவன் வெளியிடும் சில பகுதிகளோடு பாட்டு முடிகிறது. அவை யாவும் இன்பத்தேன் ஊற்றுக்கள்.

"தையல் என்றன் வீட்டில் — நீ
சமையல் செய்யும் போதுன்
கையழகு பார்த்து — நான்
களித்திடுவேன் பெண்ணே !"

வேலை செய்யும்போதுதான் இப்படி என்றில்லை ; அவள், வீட்டிலே, இங்குமங்கும் போய்வருவதுகூட அவன் நெஞ்சில் இன்பத் தேனைப் பாய்ச்சுகிறது.

"கையில் விளக்கேந்தி — நீ
கடைசியறை போவாய்
பொய்யல்லவே பெண்ணே — மிகப்
பூரிக்கும் என் மேனி !"

வீட்டில் மட்டுந்தானா இப்படி ? அவர்கள் வெளியில் புறப்பட்டால் எப்படி ? அதையும் வாயூறிச் சொல்லுகிறான் அவன்.

"கூண்டு வண்டி கட்டி — நாம்
கூடலூர் அடைந்தால்
பாண்டியன் குடும்பம் — என்று
பார்த்து மகிழ்வார்கள் !"

தங்களுடைய இணைப் பொருத்தத்தில் அவனுக்கு அத்தனை பெருமை. அத்தகைய குடும்பமே நல்ல குடும்பம். சமுதாயத்துக்குப் பயனுள்ள குடும்பம் என்பது கவிஞர் கருத்து. குடும்ப வாழ்வில் ஏதேதோ புகுந்து, இன்ப இணையை ஊடறுத்து அதிலேயே சிக்கல்களை ஏற்படுத்தி விடுவதால்தானே, மனிதன் பொதுப்பணியோ பெரும்பணியோ செய்யவியலாமல் வீட்டுச் சுவர்களுக்குள்ளேயே முடங்கி விடுகிருன்!

முக்கனிச் சாறு.

ஏற்றப்பாட்டுக் கண்ணிகளைப் படித்து வரும்போது, எதிலே எந்தச் சுவை மிகுதி என்று சொல்ல முடியாதவாறு, ஒவ்வொன்றும் எண்ணமோ எழுச்சியோ இன்பமோ தந்துகொண்டே நடக்கிறது. முழுமையாகப் பார்க்கையில், இன்றையத் தமிழர்க்கு உரிய எல்லாக் கடமைகளையும் ஒன்றிணைத்து வைத்த ஒரு பொன்னேடாக அது காட்சியளிககிறது. மொழி நடையின் எளிய தெளிந்த ஓட்டம் பாயசம்போல் இனிக்க, இடையிடையே வரும் கருத்துக்கள் முந்திரிபருப்புப் போலச் சுவையும் நலமும் பயக்க, பாடலை முடித்ததும், புதிய சமுதாயச் சிந்தனை ஒன்றே நம் இதயத்தில் நிறைகிறது.

இதைப் படிக்கின்ற எவரும் நமது பழநிலையை நினைக்கிருர்கள் ; நம் இப்போதைய நிலையை உணர்கிருர்கள் : எதிர் காலத்தை எழுப்பி நிறுத்த எண்ணுகிருர்கள். அதை எவ்வெவ்வாறு செய்யவேண்டும என்னும் சிந்தனை அங்கங்கே சிறுசிறு குமிழிகளாகப் பொங்கித் தெரிகிறது. படிக்கும்போதும் நினைக்கும்போதும் சுவை தந்து, செய்வதற்கு ஒரு குறிக்கோளும் தருவதுதானே பாட்டு? அதுதான் பாட்டு என்ருல், அத்தகைய தற்காலப் பாடல்களும் குறிப்பிடத்தக்க ஒன்று பாரதிதாசனரின் ஏற்றப்பாட்டு.

பொழிலன்பர்கள் சுவைக்க.

பொதுமக்கள் நலம்பாடிப் புதுக்கருத்தைச் சொல்க !
புன்கருத்தைச் சொல்லுவதில் ஆயிரம் வந்தாலும்
அதற்கொப்ப வேண்டாமே! அத்தமிழர் மேன்மை
அழிப்பாரைப் போற்றுதற்கும் ஏடுபல வாழ்ந்தால்
எதிர்ப்பதன்ருே தமிழர்களின் எழுதுகோல் வேலை ?
ஏற்றசெயல் செய்தற்கும் ஏன் அஞ்சவேண்டும் ?
உதிர்த்திடுக பொன்மலர்கள் உயர்வைககள், நன்றே
உணர்த்திடுக உளங்கவரும் புதுமணத்தை யாண்டும்.

—பாரதிதாசனர்.

தொல்காப்பியத்தில் உயிரிணைகள்.

(Vowel Clusters in Tholkappiam)

திரு. கா. கோ. வேங்கடராமன்,

இரண்டு மெய்யெழுத்துக்கள் அடுத்தடுத்து வருமாறுபோல (பக்கம்-eveeve) ஈருயிர்கள் அடுத்தடுத்து வருதலே உயிரிணையாம். (Vowel Clusters) இவ்வுயிரிணைகள் தொல்காப்பியர் காலத்திற்கு முன் பெருகியிருந்தது, பின்னர் அவர் காலததும், கழகக் காலத்தும் பிற்காலத்தும் நாளுக்கு நாள் குறைந்து வரலாயின.

உடம்படு மெய் :

'அகர ஆகாரம் வரூஉங்காலை
ஈற்றுமிசை அகரம் நீடலு முரித்தே' (புள்ளி. 16)

இதனால் குளவாம்பல், மரவடி என இக்காலத்து ஒலிக்கப்படுவன மராஅடி, குளாஅம்பல் எனவும் ஒலிக்கப்பட்டமை அறிகிறோம். மற்றும், அதுவன்று, பனையட்டு என்பன அதாஅன்று, பனாஅட்டு என (உயிர், 56, 82) ஒலித்து வந்தன. இவவாறு புணர்மொழிச் சொற்கள் உடம்படுமெய் பெற்று வாராத நிலையை நோக்குழி, ஒரு காலத்தே உடம்படுமெய் இல்லாமல் ஆங்கிலம் போலத் தமிழும் ஒலிக்கப்பட்டு வந்திருக்கவேண்டும் எனத தெரிகிறது. (பாவாணர் குறிப்புரை, புணரியல். 38) இன்றும், 'வரவில்லை' என நாம் ஒலிக்க, இலங்கை வாணர் 'வர இல்லை' என உடம்படு மெய் போடாது ஒலிக்கக் காண்கிறோம். தொல்காப்பியர் காலத்து உடம்படுமெய் அருகியே வழங்கியது என்பதை 'உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார்' (புணர் 38) என்ற நூற்பாவடி விளக்கா நிற்கும். ஆகலின் அக்காலத்து உயிரிணைகள் மிகுதியாயிருந்திருக்கவேண்டும் எனத தெரிகிறது.

அளபெடை :

'மூவளபிசைத்தல் ஓரெழுத்தின்றே' (நூன். 5) என்று கூறினராசிரியராதலின், 'நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய கூட்டி எழூஉதல என்மனார் புலவர்' (நூன். 6) என்ற அளபெடை கண்ணிய நூற்பாக் கண்ணும், 'கூட்டி எழூஉதல்' என்பதற்குக் 'கூட்டி எழுப்புக' எனப் பொருள் கொண்டு. அளபெடுப்பான் நின்ற நெடிலையும் இசை நிறைக்க மேல் வரூஉம் குற்றெழுத்தினையும் தனித்தனி ஒலிகளாகவே கொள்ளவேண்டும். இதனைப் பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்களும் உடன்

படக் காண்கிறோம் (History of Tamil) அவ்வாறு கொள்ளின் 'சிறுஅர்' என்புழி ஆ, அ என்ற எழுத்துக்கள் தொடர்ந்து வந்து உயிரிணையாயினமை காணலாம். இவ்வழி நோக்குவார்க்கு அள பெடைகள் அனைத்தும் உயிரிணைகளாகவே தோன்றல் வெளிப்படை. அவ்வள பெடைகளை இடத்தான் இரு பிரிவினவாகக் கொள்ளலாம்.

1. மொழி முதலில் இசை நிறைத்தல் :
ஆஅங்கு (பெயர், 20) பாஅவண்ணம் (செய், 205)
ஆஅகுந (எச்ச. 53) தாஅவண்ணம் (செய். 205)

2. மொழி இடையில் இசை நிறைத்தல் :
கடாஅ (மரபு, 106) எனுஅ (செய், 1)

3. மொழி இறுதியில் இசை நிறைத்தல் ;
எழாஅல் (மரபு, 45)

சில ஒலி அமைவுகள் :

'அகர இகரம் ஐகாரம் ஆகும்' (மொழி 21) 'அகர உகரம் ஔகார மாகும்' (மொழி 22) என வரூஉம் நூற்பாக்களின்படி. 'ஐயர்' என்னும் சொல்லை 'அஇயர்' என்றும், 'ஔவை' என்னும் சொல்லை 'அஉவை' என்றும் ஒலிக்கலாம். இவ்விடங்களில் அஇ, அஉ என உயிரிணைகள் அமையுமாறு காண்கிறோம். 'இகர யகரம் இறுதி விரவும்' (மொழி 25) என்றதனால் 'நாய்' என்பது 'நாஇ' என ஒலிக்கப்பட்டிருத்தல் வேண்டும், இவ்வாறு மொழி யீற்றுக்கண், யகரத்தின் வகையொலியாக (Free Variation) இகரம் வருவழி ஆண்டு உயிரிணைகள் அமையக்காண்கிறோம்.

வினை எச்சம் :

1. தெலுங்கிலும் கோண்டிலும் இறந்தகால இடைநிலையாய் மிகுதியும் இகரமே வரும். மலையாளத்திலும் 'நான்பாடி' என வரும். 'இன்'னை இடை நிலையாகக் கொள்ளல் பிற திராவிட மொழிகளில் இன்றாகலான், தமிழில் மட்டும் 'இன்' இறந்தகால இடை நிலை எனல் பொருந்தாது. ஆகலின் 'இ'கரமே தமிழில் இறந்தகால இடை நிலையாம். "இகர ஈறும் 'செய்து' என்னும் வாசகத்தைத் தந்தே நிற்றலின்" (வினை. 31) என்ற நச்சினார்க் கினியர் கூற்றுப்படி இகர ஈற்று வினை எச்சங்கள் செய்து எனும் வாய்பாட்டினுள் அடங்கக் காண்கிறோம், அவ்வாறு வரும் இகர ஈற்று வினை எச்சங்கள் பல உயிரிணை யமைவுபெற்று வருதலைத் தொல்காப்பியத்தில் பார்க்கலாம்.

(அ) தொகை, நிலை, கடை, சினை என நின்ற ஐகார ஈற்றுப் பெயர்ச் சொற்கள் இகரம் பெற்றுத் தொகைஇ (அகத், 22) நிலைஇ (கற்பு, 6), கடைஇ (புறத் 11), சினைஇ (புறத் 14) என்றாகி வினை எச்சப் பொருள் தந்தன.

(ஆ) அளை. நினை என வருஉம் வினையடிகள் அளைஇ (கற்பு, 5) நினைஇ (கள, 11) என ஆதலையும் காண்கிறோம்.

(இ) 'அதா அன்று' (உயிர், 56) என்புழி நிலைமொழி ஈற்று உகரம், வருமொழி முதல் அகரம் வர ஆகார மாதல் காண் கிறோம். இது போன்றே உகரவீற்றுச் சொல்முன் இகரம் வர இகரம் ஈகாரமாய் மாறும் வழக்குத் தொல்காப்பியத்திற்கு முன் இருந்திருக்க வேண்டும். (உகரத்தைக் காட்டினும் அகரமும் இகரமும் ஆற்றல் வாய்ந்தன என்பது இன்றைய மொழியியலார் கொள்கை).

தழு — தழீஇ (கற்பு 6) உறு — உறீஇ (பறத்.19)
செழு — செழீஇ (பொருள் 2) புகு — புகீஇ (புறத, 19)
ஒரு — ஒரீஇ (மெய் 35)
இங்கு உகரவீற்று வினையடிகள் இகரம் ஏற்புழி உகரம் ஈகார மாய்த் திரிய அவ்வழி இகரம் வந்தமை காணலாம்.

2. 'நிகழூஉ நின்ற' (பெயர் 19) என்பதில் வருஉம் 'நிகழூஉ', 'செய்யூ' என் வாய்பாட்டு வினை எச்சமாயிற்று.

3. 'வழீஇயினும்' என்புழியும், 'படீஇயர்' என்ற 'செய்யியர்' என் வாய்பாட்டு வினை எச்சத்தின் கண்ணும் உயிரிணைகள் வந்தன.

ஈண்டு அளபெடுத்தலின்றாகலான் பின்னையோர் இவற்றை யெலாம் சொல்லிசையளபெடைகளாய்க் கொள்ளல் பொருந்தாது. இவ்வாறு வருஉம் உயிரிணை நின்ற சொற்களெல்லாம் உடம்படு மெய் பெற்றும், மருவியும் பிற்காலத்து உயிரிணையமைவை இழந்தன,

பிறவினை :

1. 'ஆடு' என்பதை 'ஆட்டு' எனப் பிறவினையாக்குங்கால் டகரம் இரட்டிக்கக் காண்கிறோம். அதுபோல 'எழு' என்ற தன் வினைச்சொல் பிறவினையாகுங்கால் 'எழூஉ' என உகரம் இரட்டிக்கக் காண்கிறோம்.

எழு + உ + தல் — எழூஉதல் (நூன், 6)

2. 'நிறீஇ' என்ற சொல் 'நிறுத்தி' எனப் பொருள்படுங்கால் அது நின்று என்றதன் பிறவினையாம்.

நில் + து — நிறு

இங்குத் 'து' பிறவினை உணர்த்த வந்தது. (கொள் + து —கொடு என்றாற்போல)

நிறு + இ — நிறீஇ (இ = இறந்த கால இடை நிலை)

(பொருள், 2)

3. 'கொளீஇ' (மரபு 106) என்பது கொளச் செய்து' என்ற பிறவினைப் பொருள் காட்டிற்று. 'வருவி' என்புழி இகரம் பிற வினை காட்டும். அதுபோல இங்கும் ஓரிகரம் பிறவினை காட்டவும், மற்றொன்று இறந்த காலம் காட்டவும் வந்தன.

கொள் + இ + இ — கொளி + இ—கொளீஇ

பெயரெச்சங்கள் :

1. இகர ஈற்று வினையெச்சங்கள் அகரச்சாரியை பெற்றுச் 'செய்த' என் பெயரெச்சங்களாய் ஆதல் தொல்காப்பிய வழக்கு. அவை வருமாறு :

ஓரீஇ — ஓரீஇய (அகத், 34)
மரீஇ — பரீஇய (அகத், 32)
கெழீஇ — கெழீஇய (மெய் 14)

2. 'மராஅடி' என்புழி நிலைமொழி ஈற்று அகரம், வருமொழி முதலில் அகரம் வருவழி ஆகாரமாய்த் திரிகிறது. அது போலவே மிகப் பழங்காலத்தே உகர இறுதிச் சொல்முன் உகரம் வர. நிலைமொழி உகரம் ஊகாரமாய்த் திரிந்திருக்கலாம்.

இறு + உம் — இறூஉம் (செய் 70)
வரு + உம — வரூஉம் (செய் 170)
மிகு + உம — மிகூஉம (உயிர் 9)
தொகு + உம் — தொகூஉம் (புள்ளி 55)
படு + உம்—படூஉம் (கிளவி 52)
பெறு + உம்—பெறூஉம (விளி 34)

இவண் 'உம்' என்பது செய்யும் என் பெயரெச்சத்தைக் குறிக்க

வந்த விகுதியாம். பெறு, இறு முதலிய வினையடிகளைக்கொண்டு வரும் பெயரெச்சங்கள் பெறும். இறும் எனவன்றோ வருமெனின், மகரவொற்றுத் தனியே நின்று பெயரெச்ச விகுதியாதல் வேண்டும். 'உம்' என்பதே விகுதியாதலின் பெறும், இறும் என்ற விடங்களில் (பிற்கால வழக்கு) உகரம் கெட்டதாகவே கொள்க. தொல்காப்பியத்தில் 'வரூஉம்' என்பது பெயரெச்சப் பொருளில் எண்பத்தொரு இடங்களில் வந்துளன. 'வரும்' என்பது அப்பொருளில் வருமிடன் (புள். 5) வரும் வழி (புள், 74. 46) வருங்காலை (இடை, 33) என நான்கிடத்தேயே வந்துளது. மற்றும், 'வரும்' என்ற இவ்வொன்றைத் தவிரப் பெறூஉம், இறூஉம், என வரூஉம் செய்யும் என் பெயரெச்சங்களெல்லாம் உயிரிணை பெற்றே அமையக் காண்கிறோம். ஆகலின் உயிரிணைகளைப் பெற்றுவந்த இவ்வகைப் பெயரெச்சங்கள் பிற்காலத்தே குறுகிவிட்டன எனலாம்.

இவவாறு தொல்காப்பியத்துச் செய்த, செய்யும் என்னும் இருவகைப் பெயரெச்சங்களிலும் உயிரிணைகள் வந்து பொருள் வேறுபாடு காட்டி நின்றன.

எதிர்மறை :

தெலுங்கு, கன்னடம் ஆகிய பிற திராவிட மொழிகளில் அகரமே எதிர்மறை குறிக்க வருதலின், அதுவே பழமையானதென்பர். இந்நிலையில், பண்டு அகரம் தமிழிலும் எதிர்மறை இடை நிலையாய் இருந்திருத்தல் கூடும்.

1. பெறு + அ + அன் — பெறாஅன் (அகத், 53)
பெறு + அ + அர் — பெறாஅர் (அகத், 57)
கொடு + அ + அர் — கொடாஅர் (புறத், 29)
வேறுபடு + அ + அது — வேறுபடாஅது (மொழி, 35)
மிகு + அ + அ — மிகாஅ (உயிர், 61)

'பெறு' என்ற வினையடி, பெயரெச்சவிகுதியாகிய அகரம் சேர்வுழிப் 'பெற' என ஆவதைப்போல ஈண்டும் எதிர்மறை இடைநிலையாகிய அகரம் சேருங்கால், பெறஎன்றாகி, அதனோடு 'அன்' விகுதி சேரும்பொழுது (மர + அடி — மராஅடி என்றாற் போலப்) பெறாஅன்' என்றாகிறது. இவ்வாறே பிறவும்.

2. எதிர்மறை இடைநிலையாம் அகரமும், பெயரெச்ச விகுதியாம் அகரமும் சேர்ந்து வருங்காலும் உயிரிணையமைவு ஏற்படக் காண்கிறோம்.

புகு + அ + அ + காலை — புகாஅக்காலை (களவு, 17)

இவ்வாறே வேறுபடாஅப் பலபொருள் (கிளவி, 5254) தொடாஅக்காஞ்சி (புறத், 19), பகாஅவிருந்து(களவு,17) போன்றவற்றையும் கொள்க. இக்காலத்துத்'த' என்ற உயிர்மெய் எதிர்மறைப் பெயரெச்சச் சொற்களின் ஈற்றில் அமைகிறது. இவ்வமைவு தொல்காப்பியத்து இல்லை. 'தொடாஅக் காஞ்சி' என வருமேயன்றித் 'தொடாத காஞ்சி' என வாராது. **தகர ஒற்றுகிய இறந்தகால இடைநிலை பிற்காலத்தே ஆகாரத்திற்கும், அகரத்திற்கும் இடையே சேர்க்கப்பட்டதெனத் தெரிகிறது.**

வினைமுற்று :

செய்யும் என் பெயரெச்சங்களைப்போல. உகரவீற்று வினையடிகளைக் கொண்டு அமையும் செய்யும் என் முற்றுக்களும் உயிரிணைகளோடிலங்கக் காண்கிறோம்.

காட்டு :

நெறிபெற்று வரூஉம் (செய், 61)
இவ்வாறன்றிக் குறுகியும் வரக்காண்கிறோம்.

'புல்லொடுவரும்' (மரபு 88), கண்ணியவருமே (புறத், 27)

வரூஉம் என்பதே முதல் வடிவமாயிருந்து பின்னர் வரும் என ஆகியிருத்தல் வேண்டுமென்பது முன்னர்க் காட்டினும், 'மரீஇயது ஓராஅல்' (எச்ச. 47), 'கூட்டிஎழூஉதல்' (நூன், 6) என்புழி, அல்ஈற்று வியங்கோளின்கண் உயிரிணைகள் வந்தன.

பெயர்ச்சொற்கள் :

1. பழங்காலத்து, உகரம் பெயர் விகுதியாகவும் வந்துளது.

ஆள் + து — ஆடு + உ — ஆடூஉ (அகத் 23)
மகள் + து — மகடு + உ — மகடூஉ (அகத் 38)
ஒரு + உ — ஒரூஉ (செய் 51)
வெரு + உ — வெரூஉ (உரி 50)
உறு + உ — உறூஉ (செய் 107)

2. 'இமையோர் தேஎத்து" (பொருள். 52) என்புழித் 'தேஎம்' என்ற சொல்லும், வெரூஉதல் (மெய், 12), உசாஅதல் எனவரூஉம் 'தல்' ஈற்றுத் தொழிற் பெயர்களும், 'தழீஇயின'

(கிளவி 17). மரீஇயது (எச்ச, 47) எனவரூஉம் வினையாலணையும் பெயர்களும் உயிரிணைகளோடு வந்தன.

3. தழுவல், வழுவல் என்ற தொழிற்பெயர்களின் பழைய வடிவங்கள் தழாஅல் (செய், 178) வழாஅல் (கிளவி, 13) என உயிரிணைகளோடு கூடிக்காணப்படும். ஓராஅல் (எச்ச, 47), கொளாஅல் (எச்ச, 13) என்பனவும் அன்ன, 'அல்லது செய்தல் ஓம்புமின்' (புறம் 125) என்புழி, ஓம்புதல் என்பது விலக்கற் பொருட்டாய் வருவது போன்றே 'வழாஅல் ஓம்பல்' (கிளவி 13) என்புழியும் ஓம்பல் என்பது விலக்கற் பொருட்டாய் வந்ததாகவே கொண்டு, வழாஅல் என்பதை வழுவல் என்னும் பொருள்படும் உடன்பாட்டுச் சொல்லாகவே கொள்ளவேண்டும்.

விளி :

தொழீஇஇ (8), உழாஅஅன் (18), சிருஅஅர் (24), மாஅஅல் (32), கோஒஒன் (32), நம்பீஇ (35) என விளிமரபு நூற்பாக்கள் அளபெடை கண்ணிய உயிரிணைகள் விளிக்கண் வருதலை அறிவிக்கும்.

இடைச்சொல் :

"தேற்ற எகரமும் சிறப்பின் ஓவ்வும்" (உயிர் 17) என்றதால் யானேஎ கொண்டேன், ஓஒ கொண்டான் என ஏகார, ஓகாரங்களாகிய இடைச்சொற்களின் நீட்சி போலவும் உயிரிணைகள் நின்றன.

உரிச்சொல் :

'சாஅய்' (உரி, 34) என்ற உரிச்சொல் உயிரிணையோடு பொருந்தியிருப்பக் காண்கிறோம்.

எழுத்துப்பேறு :

புணர்மொழிக்கண் பலவிடங்களில் உயிரிணைகள் வருதலைத் தொல்காப்பியம் சுட்டும்.

"உம்மை எஞ்சிய இருபெயர்த் தொகைமொழி—
மெய்ம்மையாக அகரம் மிகுமே" (உயிர், 21)

என்றதால் 'உவாஅப்பதினான்கு' என வருநவும்,
"குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும்—
அறியத்தோன்றும் அகரக்கிளவி" (உயிர், 24)

என்றதால் பலாஅக் கோடு, காஅக்குறை எனவருநவும்,

''குற்றெழுத்திம்பரும் ஓரெழுத்து மொழிக்கும்—
நிற்றல் வேண்டும் உகரக்கிளவி'' (உயிர் 65)

என்றதால் உடூஉக்குறை, தூஉக்குறை எனவருநவும்,

''ஏஎன் இறுதிக்கு எகரம்வருமே'' (உயிர் 75)

என்றதால் ஏஎக்கொட்டில் எனவருநவும்,

''வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே—
ஒகரம் வருதல் ஆவயி னான'' (உயிர் 90)

என்றதால் ஓஒக்கடுமை எனவருநவும் புணர்மொழிக்கண் உயிரிணைகள் எழுத்துப்பேற்றால் வந்தமைக்குக் காட்டுக்களாம். மற்றும்,

''பலவற்றிறுதி நீடுமொழியுள வே—
செய்யுள் கண்ணிய தொடர்மொழியான'' (உயிர் 11)

என்றதால் 'பலாஅஞ் சிலாஅம்' என வருநவும்,

யாஅங்கோடு, பிடாஅங்கோடு எனவருநவும், (உயிர் 27)

''ழகர உகரம் நீடிடன் உடைத்தே
உகரம் வருதல் ஆவயி னான'' (உயிர், 59)

என்றதால் 'பழூஉப்பல்' என வருநவும் எழுத்துப் பேற்றான் அமைந்த உயிரிணைகளையே கொண்டுள்ளன.

முடிவுரை :

வினைஎச்சங்களையும் பெயரெச்சங்களையும் ஆக்கவும், தன் வினைகளைப் பிறவினைகளாக மாற்றவும் உயிரிணைகள் பயன்பட்டமையினை அறிந்தோம். மற்றும் எதிர்மறைவினை. வினைமுற்று, பெயர்ச் சொற்கள் ஆகியவற்றிலும் உயிரிணைகள் வந்துள. இவ்வாறு வரும் உயிரிணைகள்பற்றிச் சரியான வரையறைகளைத் தொல்காப்பியர் கூறினாரல்லர். அவ்வாறு, அவர் வரையறுக்காது விட்டமையான், அக்காலத்தேயே நடைமுறை வழக்கில் உயிரிணையமைவுகள் அருகிவிட்டன என்பது பெறப்படும்.

பொழிலன்பர்கள் சுவைக்க.

1. மடம் என்பது பிறரறிவித்தவற்றை உட்கொண்டு அவற்றைப் பிறர் தெரியக் காட்டாது அகத்தே வைக்கும் மகளிர்க்குரிய இயற்கைக் குணம்.

2. கொலைத் தொழிலினும், இரும்பு முதலான வலிய உலோகங்கள் அடித்துத் திரட்டுந் தொழிலினும் பழகிய கையைக் 'கருங்கை' என்பர்.

—மறைமலையடிகள்.

தமிழ் வாழ்க.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் மேற்பார்வையிலுள்ள,

உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளிக்காகக் கட்டப்படவிருக்கும்,

அறிவியல் ஆய்வுக்கூடத்திற்கு அடிக்கல் நிறுவ,

தமிழ் நாடு கல்வி அமைச்சர்,

மாண்புமிகு. இரா. நெடுஞ்செழியன், அவர்கள்,

எழுந்தருளியபோது

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் உவந்தளித்த

வரவேற்பு வாழ்த்துரை.

செந்தமிழை வளர்ப்பதற்கே குறிக்கொண்டு
நன்முயற்சி சிறக்கச் செய்து
பைந்தமிழர் யாவரையும் ஒன்ருக்கிப்
பணிபுரியும் பான்மை வாய்ந்த
நந்தமிழர் கரந்தைவளர் நற்சங்கச்
செயல்பலவும் நாளும் வாழ
அந்தமிழ! நெடுஞ்செழிய! அறிஞரண்ணு
வழியியங்கும் அமைச்ச! வாராய்.

"தண்ணிறைந்த பெருந்தடமும், தாமரையும்,
நறுந்தேனும், தகுநல் வண்டும்,
பண்ணிறைந்த பாட்டிசையும், உதயசூ
ரியனழகும் பாரித் தாற்போல்"
கண்ணிறைந்த கரந்தைவைப்பும், தமிழ்ச்சங்கக்
கவின்பொலிவும், கலையும், கற்கும்
எண்ணிறைந்த மாணவரும், இசைப்பதுவும்,
நின்வரவும் இசைந்த நன்றே.

நன்ருக அறிந்துணர்ந்த நற்பொருளை
எளிதாக, நல்ல சொல்லால்,
ஒன்ருகப் பொருள்விளங்க, முறைப்படுத்தி
ஒன்ருரும் உவக்கும் வண்ணம்,



விழாவில் :- மாண்புமிகு அமைச்சருடன், சங்கத்தலைவர், பொருளாளர், நகரமன்றத் தலைவர் முதலியோர்.

குன்றுமல், சோர்வின்றி மொழிதிறந்தாள்,
கொள்கையினை உலகம் முற்றும்
கன்றுமல் விரைந்தேற்கக் கடமைபுரி
நாவலனே! களிக்க வாராய்.

கல்விபயில் மாணவர்கள் கல்விக்கே
மனந்தந்து, கலைகள் முற்றிச்
செல்வமெனும் அறிவியலைச் சிறப்பாகப்
பெற்றதற்பின், சிறந்த தொண்டில்
வல்லவராய் வருதலொன்றே நாட்டினுக்கு
நன்மையென வைய மெல்லாம்
சொல்லிவரும பேரறிஞ! அறிவியலை
ஆய்மன்றம் சுடர வாராய்.

வாயதனிற் செந்தமிழும், வண்கையினில்
நற்றொண்டும், வாய்க்கப் பெற்றே,
ஆயபெருந் தமிழ்நாடு முன்னேற்றப்
பாதையினில் அழகாய்ச் செல்ல,
தூயமனத் தமிழவேள் தோற்றுவித்த
தமிழ்ச்சங்கம் தொன்று வாழ,
நேயமனப் பாண்டியன்போல் நெடுஞ்செழிய!
வந்தாய்நீ நெடிது வாழ்க.

கருந்திட்டைக்குடி, இங்ஙனம்,
30—1—70. கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார்.

பொழிலன்பர்கள் சுவைக்க :

தெற்றென என்பது, தெளிவாக என்னும் பொருளில் வழங்குகின்றது. இதனை தெறு + என — என்று பிரித்தால் இப்பொருள் வாராது. ஆகலின், தெள் + து + என = தெற்றென என்றுயிற்று என்றே கொள்ளுதல் வேண்டும். தெற்றென என்பது தெள் என்னும் பகுதியடியாகப் பிறந்திலதாயின். அதற்கு, தெளிவாக என்னும் பொருளைக் கூறுதல் யாங்கனம்? இனி, செல் + தல் — சேறல் என்றுதல்போல, தெள் + தல் — தேறல் என்றுயிருக்கின்றது. தேறல் என்பது தெளிதல், தெளிவு, தெளிந்தது என்னும் பொருள் தருதல் அறிக. இவற்றால், தகாரம் வந்தவழி ளகாரம் றகாரமாதலும் உண்டு என்பது அறியப்படும்.

—வேங்கடராசலு ரெட்டியார்.

நாடி மூன்று.

திரு. ஆ. பாலன், தஞ்சை.

நாடி மூன்று என்று சொல்லியவுடன் நாடியறியும் திறனுடையோர், 'வாத, பித்த, சிலேத்துமம் என நாடி மூன்றும் வகையான அதற்குமொரு விளக்கம் உண்டாம்'—என, தம் சொந்த நடையில் கவிபாடி, வாத, பித்த, சிலேத்துமம் என்னும் மூன்றையும் உள்ளடக்கியதே உடல் என்றும், இம்மூன்றும் தத்தம் அளவில் இருந்துவரின், நோயணுகா நிலை எய்தும் என்றும், இம்மூன்றில் வாதம் மாறுபடின்; கை, கால் வீங்கிப் பருத்தலும், பலச்சிக்கல் தரும் மலச்சிக்கலும். கோடையிலும் குளிர்கின்ற காய்ச்சலும், உடல் முழுதும் வலித்தலும், வியர்வை மிகுதலும் முதலிய நோய்கள் நாடுமெனவும், பித்தம் மேலோங்குமாயின் வாய்நீர் ஊறலும், வாந்தியும், வெம்மைதரும் வெப்பு நோயும், தலைநோவும் மூர்ச்சையும் வேறுபிறவும் தவறுமல் வருமெனவும்; சிலேத்துமம் சீர்கெடுமாயின் பசியின்மையும். உடல மெலிதலும், நெஞ்சுவலியும், காய்ச்சலும் போன்ற பலநோய்கள் தோன்றுமெனவும்; எடுத்துரைத்து, மேலும் நாடியறிந்து நற்பயன் காணும் முறையையும் எடுத்துக் கூறுவர். வாதநாடியின் துடிப்பு; அன்னம், கோழி, ஆமை போன்ற நடையை உடையதெனவும், பித்தநாடி தவளைபோல் பாய்ந்து செல்லும் தன்மையைப் பெற்றதெனவும், சிலேத்துமம் சீறிவரும் நாகத்தை ஒகததது எனவும். இத்துடிப்பெல்லாம் குருதியோட்டத்தில் அடங்கியுள்ளதெனவும், கைப்பிடித்து விரல் மடித்து நாடித்துடிப்பினை அறிகவெனவும் செப்புவர்.

'இத்தகைய எளிய மும்முறையினை ஏற்றம் தரும் வகையில் போற்றி நிற்கும் சித்த மருத்துவத்தின் வியத்தகு நுட்பத்தினை உணர்வாரின்றி கைப்பிடிததார் எல்லாரும் நாடிப்பார்த்தார் என்ற நிலை வந்து சேர்ந்தமையின், நாடியின் அரும்பெரும் பயன்தரு நன்மைகள் அழிந்தொழிந்தன'—என வருந்துவர் சித்த மருததுவத்தின் ஒப்பிலாப் பயன் உணர்வோர். இந்நாடிப் பார்க்கும் முறையினைத் தேடி அலைவாரின்மையின், அஃதுவும் ஓடிந்த நிலையில் நலிந்துள்ளது. நாடிகண்டு தேடிவரும் நோய்களை விரட்டிய முற்காலம் போய், ஊசி, மாத்திரைகளை ஓயாமல் உடலில் ஏற்றி. ஒருநொடிப் பயன் கண்டு இன்புறும் இக்காலம் வந்தமையை நாம் அறிவோம். இதனை வள்ளுவர் பெருமகன் அறிவாரா? அவர் வாழ்ந்து மறைந்தது ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னன்றோ? ஆதலின், அவர் தாம் இயற்றிய நூலில் நாடியைப்பற்றி நன்முறையில் விளக்கியுள்ளார்.

"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று"—என

மருந்தெனும் அதிகாரத்தில் நோய் வரும்காரணங்களை விளக்கும் முகத்தான் முதற்கண் மூன்று நாடிகளின் செயற்திறனை விளக்கிப் போந்தார், நூலோர்—வளிமுதலா எண்ணிய மூன்று—மிகினும் குறையினும் நோய் செய்யும்—எனக் கூறிச் சென்றமையால் வள்ளுவருக்கு மருத்துவத் துறையில் உள்ள ஒட்பத் தெளிவு புலப்படும்.

"எல்லாப் பொருளும் இதன்பாலுள,,—எனவுரைக்கும் வண்ணம் ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறள் ஆக்கிய வள்ளுவர் இம்முந்நாடி பற்றி மட்டுமே கூறிச் சென்றிருப்பா ராயின்; அவர் ஒரு மருத்துவப் புலவராகவோ? மன்னரவைப் புலவராகவோ? தான் இருந்திருத்தல் இயலும் தெய்வப் புலவ ராகவோ? வாய்மைப் புலவராகவோ? வழங்கும் வாய்ப்பினைப் பெற்றிருத்தல் அரிதாம். "வளிமுதலா எண்ணிய மூன்று"—என மருத்துவ நாடி கூறி அமைந்த வள்ளுவர்; அவ்வளவில் நில்லாது. ஆய்வுப் பொருளைத் தரும் முறையில் நாடி என்னும் சொல்லினைப் பயன்படுத்தி; அதன் வாயிலாய் அறியாமை இருளை யகற்றி. அன்பு நெறியில், அருள் வழியில் மக்களை ஈர்த்துச் செல்ல முற் படுதலை; அச்சொல் வருமிடங்களைக் கண்ணுறுவார் அறிவர். ஈங்கு இரு குறட்பாவில் வரும் மூன்று நாடிகளின் இன்றியமை யாமையைப் பற்றிக் காண்போம்.

நோயுற்றார் மருத்துவரை நாடி மருந்தினைப்பெற்று, அதனை யுண்டு, உடல்நலம் விழைய, அஃது இயலா நிலையில் மேன் மேலும் மருந்தினையுண்டும் குணமடையாமல் மனங்குன்றி யிருப்பாரைக் காண — வருந்தும் மருத்துவரை, வள்ளுவர் அழைத்து,

"நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்"—என,

புதுமையான நாடி மூன்றினை அவர்க்கு நவின்று அதனைக் கடைப் பிடித்தொழுகின், ஓங்கி நிற்கும் நீங்கா நோயும் நிலையின்றி மாயும் என, அறிவு புகட்டு வராயினர். இவ்வாறு எண்ணும் வண்ணம் இக்குறட்பா அமைந்துள்ளது. நாடி என்ற சொல் மூவிடங்களில் வந்து மருத்துவத்துறை வல்லார்க்கு ஒளிகாட்டும் கலங்கரை விளக்காய் நிலைபெற்றுள்ளது. 'யானைக்கும் அடிசறுக்கும்'

என்பார் போல நோய் நுணுக்கம் அறிந்தார்க்கும் புலப்படா நோய்கள் உண்டு ஆதலின், 'நோய்நாடி'—என்று தொடங்கிய வள்ளுவர் 'வாய்ப்பச்செயல்' — என, முடித்தல் செய்தார். அஃதாவது பொருந்துகின்ற வற்றை ஏற்றமுறையில் தகும்நேரத்தில் செய்க என்பதே, அதன் பொருளாய் அமையும்.

விண்ணில் விளையாடித்திரியும் திங்களுக்கே மறுவுண்டெனில் மண்ணில் மயங்கித்திரியும் மனிதருக்கு மறுவில்லாதிருத்தல் இயலுமோ? ஆதலின் மக்களாய்ப் பிறந்தார். அனைவரும் மனமாசற்றாராய்க் குற்றங்குறையிலராய் வாழ்தல் அரிது. நிறைகுடம் நீர் வெம்மையால் குறைதல்போல, சுற்றுப்புறச் சூழ்நிலையால் ஒருவரின் நிறைகுணங்களும் குறைதல் உண்டு. ஆதலின். மருந்துவல்லுநர்க்கு நாடி மூன்றினை நவின்றவாறே, பிறரைத் தெரிந்து, தெளிந்து அவரோடு நட்புச் செய்து நலம் பெற்று வாழ விரும்புதலை மேற்கொள்வார்க்கும், மூன்று நாடிகளை அறிந்து கூறியுள்ளார் தெய்வப் புலவரென்க. அன்பின் மிகுதியால் ஒருவரின் குணத்தையும், அன்பின்மை மிகுதியால் ஒருவரின் குறைகளையும் கண்டு. ஒருவரை விருப்புதலும், வெறுத்தலும் செய்யாது அவரின் குணங்களையும் தொகுத்துக் குற்றங்களையும் அடுக்கி, இவை யிரண்டில் அளவில் குறைவதை விடுத்து அளவில் மிகுவதையே அவரின் இயல்பாம் தன்மையெனக் கருதி, தெரிந்து தெளிதல் வேண்டும். இங்ஙனம் தெரிந்து தெளிந்து ஒருவரிடத்தில் நட்புச்செய்யின் எத்துன்பமும் நேரா. அவர் செய்யும் செயல் யாவும் தூய்மை யுடையதாய் நலம் பயக்கும் எனும் நோக்கில்;

"குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல்"— என்பாராயினர்.

இதனால் தெய்வப் புலவரின் சீரிய நோக்குத் தெற்றெனப் புலப்படும். குணம் கண்ட மாத்திரத்திலேயே ஒருவரை நல்லவரென நம்பி ஏமாற்றம் அடையாது, எண்ணித் துணிகவென எச்சரித்தல் செய்யும் முகத்தான் 'குணம் நாடி' என்று தொடங்கிய அவர் 'மிக்க கொளல்' எனமுடித்தார்.

இங்ஙனம் நோய் நாடியும் குணம் நாடியும் கூறிச் சென்ற வள்ளுவரின் மூன்று நாடிகளையும், வையத்துள் வாழ்வாங்கு வாழ விரும்புவார்; தம் கருத்தில் கொண்டு நடப்பின் நலம் பல பெற்றவராய் நன்மை மிக்கவராய்த் திகழ்வர் என்பது திண்ணம்,

---

கள் - வரலாறு.

திரு. புலவர், சரவணத் தமிழன்

சாற்றுக்கள் அறத்திற்கும் பொருளிற்கும் அன்றியும் இன்பத்திற்கும் நன்றாகாது என்ற கருத்து ஒன்றாய் உறுதிப்பட்டமையின் கள் என்னும் சொற்பின் ஒட்டிடைச் சொல்லைப் பின்பற்றுவோமாக.

'கள்' என்னும் இறுதிநிலை கணப்பொருட்டாயதோர் தொகுதிச் சொல் :

கள் — கண் — கண்ணுதல் (திரளுதல்)

கணம் — கணக்கு — நெடுங்கணக்கு (எழுத்துத் தொகுதி), முன்பின்பட ஐயாயிரம் ஆண்டுகள் முன்னம் தமிழ்மக்களின் உண்ணைக்கில் இச்சொல் உராய்ந்து கொண்டிருந்திருத்தல் ஆகும். தொல்காப்பியர் இறுதி நிலைகளைத் திரட்டிக்கூறிய கிளவியாக்கத்திலாதல் (தொல் - 9) விரித்துக் கூறிய வினையியலிலாதல் (தொல் - 216) வையாது, பெயரியலில் (தொல் - 14)

'கள்ளொடு சிவணும் அவ்வியற்பெயரே
கொள்வழி யுடைய பலவறி சொற்கே'—

என நூற்றிருத்தலின், கள் தொல்காப்பியக் காலத்தில் 'ஒன்றறி சொற்பெயர்ப்பின் சிவணிப் புலவறி சொல்லாக்கல் ஒரோவழி நிகழத் தொடங்கியது' எனலாம். பின் பின் பலவின் பாற் பெயரை உருவாக்குவதில் கள், கால்ஊன்றல் மேயது.

நன்னூல் எழுஞ் சூழலில் கள் புலவின் பாற்பெயரின் ஈற்றுறுப் பாயதை (நன் 280) 'கள்ளிறு மொழியும் ... ... பலவின் பெயராகும்மே என்பதனுன் அறியலாம். இந்நூலும் தொல்காப்பிய மரபை ஒட்டி விகுதிகளைத் திரட்டிக் கூறிய விடத்துக் (சொல் — பதம் — இயல் 13, வினை 10) கள்ளைக் கூறாமை பெரும்பால் வினைவிகுதியை வரிசைப்படுத்தலின். 'வினையின் விகுதி பெயரினும் சிலவே' (சொல்லியல் 13) என்பது நூற்பா.

கள்ளை இலக்கண நூல்கள் விகுதிப் பட்டி செயாது தனித்துக் கூறலின் ஒருதுணைச் சொல்போல் மதிக்கத்தகவது.

எனவே— குறிப்பு + கள் — வன் தொடர்க் குற்றுகரக்கு முன் வரும் வலிமுதற் புணர்வில் இருசொல் அல்வழிப் புணர்ச்சிக்கியைய (நன் 181) வலித்துக் குறிப்புக்கள் என்று வரைதலே இலக்கண நெஞ்சுக்கு ஏற்புடையது. விகுதியளவாய் நினைந்து வலிமிகுக் காது வழுவுவது வழுவமைதி என்க.

மற்றிவ்வாறு கள் தோன்றி, ஓரோவழி இயன்று, பெயர் இறுதி நிலையாய் வலித்ததன்றோ! இதற்கிடையில் 'அவர் வந்தார்' என்னும் தொடரின் பன்மைப் பொருள் 'உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் .. —.. பாறிணை இழுக்கினும் இயல்பே (நன் —379) என்ற இலக்கணம் எழுதற் கடியாய் இக்கால் போல ஒருமை உணர்த்த லாயிற்று. புறநானூற்றில் தொடர்பாடல் விளக்கமாய்ச் சுருங்கக் குறிக்கும் (புறம் 105 முதல்) 'அவனை அவர் பாடியது' என்பதில், இழிவானோ மிக்கிளமையானோ அவன் என் றலும் இன்று; அவர் என்பது தற்கால வழக்குப் போல வெற் றொருமையோ முன்னம்போல் பன்மையோ சுட்டிற்றும் இன்று. உயர்வுபற்றிய ஒருமை என்க, (இக்கால் உயர்வொருமைக்கு அவர்கள் என்பது போல்வது).

அவன் என்றல் இயல்பொருமை வழக்காயிருந்த இவ்வெல்லை யினே தமிழ் மக்களொடு வழக்கொன்றியிருந்த பார்ப்பன மக்கள் தனிச்சேரியுடைந்தமையாற் போலும் இன்றும் அவர் குடும்பத்து ஒருமை வழக்கு உலவுவது. ஏனை, பலர்பால் விகுதியாய் ஆர் ஒருமைப் பண்புற்று கள்ளோடிணைந்தல்லது பன்மை சுட்டும் பண்பற்றது. (ஆர்·அவ்வாரு யிற்றில்லை, காண்க·வந்தார்(கள்) வந்தனர்). இத்தகைத்தாய்க் கள் பலவின் பாலினின்று பலர் பாலுக்கும் தன் ஆட்சி எல்லையை விரித்துக் கொண்டது. சான்று .. ....'கள்ளென் ஈற்றின் ஏற்பவும்........பல்லோர் பெயரின் பகுதியாகும்' (ஈண்டுப் பகுதி என்னுஞ் சொல்லாட்சி வெறும் 'வகை' என்னும் பொருட்டு),

கள் ஈரெழுத்து ஒரு சொல் என்னும் அம்மட்டோ?

'அச்சமே கீழ்களது ஆசாரம்' (தயமை 5)
'மற்றை யவர்கள் தவம்' (தவம் 3)

இவ்விரண்டினும் பலர்பாற் பெயராக்கத்திற்குக் கள் பயன் படடிருத்தலும் திருக்குறளின் காலப் பின்மைக்கு (கி. பி. 6-ஆம் நூற்றாண்டு).ச் சான்றென்றென்பர் திரு. வையாபுரியார், (நூல் காவிய · பாவியக்காலம்).

'கீழ்கள்' என்றவிடத்து அஃறிணைப் பன்மையாய்க் கூறுவதே ஆசிரியர் கருத்து. இதனை, 'சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல் கொல்லப் பயன்படும் கீழ்' என்புழிக் கீழ்என இகழ்ச்சி அஃறிணைப் பொருட்டாய்க் கூறியிருத்தலின் அறியலாம். செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று ஒருமைக்கு வருவதுண்டால் - எனின் ஈண்டு 'பயன்படுவர் சான்றோர்' எனப் பன்மைப் பொருண்மையே எடுத்துக் காட்டுவமையாக அமைந்து இருத்தலின் அவ்வழிக்'கீழ்' என்பது அஃறிணை யியற்பெயராய் (பால்பகா அஃறிணையாய்)ப் பன்மையாம்; அதனையே உயர் திணை எனின் செய்யும் என்னும் முற்றைப் பெறலாகாமையின் (நன் 348) அஃறிணைப் பன்மையாயே நிற்றல் தெளிவு

மற்று, 'மற்றையவர்கள் தவம்' — என்பதோ — சொற்கள் இஃ வெல்லைத் — தென்றல் இற்றை எய்தும் ஏட்டள வல்லது பிறிதில்லை. அதற்கிடைப்படும் மக்கள் வழக்கு நெடிய தென்க. அன்றியும் தொல்காப்பியத்திற்கும் நன்னூற்கும் இடைப்பட்ட 1500 ஆண்டுகளில் முற்பால் அன்றிப் பிற்பாலோ இவ்வழக்கு எழுந்ததென்பது என்றோ? தொல்காப்பியத்துப் பயிலும் மக்கள் என்னும் சொல்லே கள்ளீற்றுப் பலவழி சொல்லன்றோ, எனவே ஒரு நரைமயிர் முழுக் கிழமாக்காதே.

கள், பலவின் பாற் பெயர்விகுதி நிலையினின்று வினைக்குத் தாவியதும் உண்டே, மற்று உயர்திணைப் பன்மையில் வாய்த்த இடம் அஃறிணைப் பன்மையில் ஆகாததாயிற்று, அவ்விடத்து ஆயுழியும் நிலையிற்றின்று (மேலையார் செய்வனகள் — திருப் பாவை 26). பின்றை இக்கால் கள் இணைந்த சொற்களை 'அவாள் வந்தாளே,' 'அவு(ங்)க வந்தா(ங்)க' என்று சப்பையாக்கவும், அதுகள், அவைகள் என்ற பிழை வழக்குப் படுத்தவும் உளமுற்று உட்கியுள்ளது, சொல்லின் நடைச்சாலை மக்கள் செந் நாக்குத் தடமேயன்றோ.

பொழிலன்பர்கள் சுவைக்க :

புடவை - இந்நாளில் புடவை என்பது பெண்மக்கள் உடுத்தும் உடையை உணர்த்துகின்றது. ஆனால் முற்காலத்தில் ஆண் மக்கள் உடுத்திய உடையும் புடவை என்றே வழங்கி வந்ததென்பது பல கல்வெட்டுக்களால் புலப்படுகின்றது. இவ்வுண்மையை உத்தம சோழனது செப்பேட்டின் ஒரு பகுதியால் அறியலாம். ...... 'ஆராதிக்கும் (43) வேதபிராமணன் ஒருவனுக்கு நெல் பதக்கும் இவனுக்கு புடவை முதல் (44) ஓராட்டை நாளைக்குப் பொன்ஐங்கழஞ்சும். (S. I. I. Vol III No. 128)

— சதாசிவ பண்டாரத்தார்.

இருங்கோவேளும் நற்குடிவேளாளரும், (கோட்டைவேளாளரும்)

(இரு தமிழ்க் குலத்தோரின் தொன்மை, தோற்றம் பற்றிய சில கருத்துக்கள்.)

திரு. பி. இராமநாதன், பி.ஏ., பி.எல்.,

[இலண்டன் பல்கலைக் கழகத்தின் "ஆசிய, ஆப்பிரிக்கப் படிப்புக்கள் பள்ளியின் தாளிகை" தொகுதி 32 பகுதி 2-இல் (1969 சூன் திங்கள்) பக்கங்கள் 323–343-இல் வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கம்]

1. புறநானூற்றுப் பாடல்கள் 201-ம், 202-ம் இருங்கோவேளைக் கபிலர் பாடியவை. அப்பாடல்களிலிருந்தும் அவற்றின் பழைய உரையிலிருந்தும் இருங்கோவேளைப்பற்றித் தெரியவரும் முக்கியமான செய்திகள் பின்வருவன ;

(அ) அவன் வேளிருள் ஒரு முக்கியமான தலைவன், அவன் முன்னோர் 49 தலைமுறையாக நல் அரண் அமைந்த துவரை நகரை ஆண்டவர்கள். புறநானூற்று உரை 'துவரை' யைத் 'துவராபதி' என அழைக்கிறது. கபிலர் காலததில் இருங்கோவேள் துவரையில் இல்லை என்பது வெளிப்படை.

(ஆ) 'புலிகடிமால்' என்னும் பெயரும் அவனுக்கு வழங்கியது, குன்றுகள் நிறைந்த நாட்டில் அமைந்த பல ஊர்களை ஆண்டவன் அவன், ஒரு குன்றில் தங்கம் கிடைத்து வந்தது. அவன் முன்னோருக்குப் பெருஞ் செல்வத்தை அளித்து வந்த சிற்றரையம். பேரரையம் என்னும் இரண்டு ஊர்களும் அவன் காலத்தில் அழிவுற்றன. அல்லது அழிவுறும் நிலையிலோ இருந்தன. இருங்கோவேளின் முன்னோனை ஒருவன் கழாஅத்தலை என்னும் புலவரை இகழ்ந்ததே அவ்வூர்கள் அழிவுக்குக் காரணம் என்று கபிலர் கூறுகிறார்.

---

1. துவரையிலிருந்து வேளிர் குடிபெயர்ந்த செய்தி 12ம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்றில் குறிப்பிடப்படுகிறது. அக்கல்வெட்டு "புதுக்கோட்டை மாநிலக் கல்வெட்டுகளில்" 120ம் கல்வெட்டாகத் தரப்பட்டுள்ளது. ஔவை துரைசாமி பிள்ளையின் "புறநானூறு" 2ஆம் தொகுதியில் (சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ; சென்னை, 1951) குறிப்பிடப்படுகிறது. அக்கல்வெட்டில் "துவரைமா நகர் நின்று போந்த தொன்மை பார்த்துக் கிள்ளி வேந்தன் நிகரில் தென் கவிர் நாடு தன்னில் நிகழ்வித்த நிதியாளர்" என்னும் தொடர் வருகிறது.

2. 'எவ்வி தொல்குடிப்படிஇயர் மற்றிவர் கைவண் பாரி மகளிர்' என்னும் புறநானூற்று 202.ஆம் பாடல் 14—15-ஆம் அடிகளின் உரை வருமாறு; ''இவர் எவ்வியுடைய பழைய குடியிலே படுவார்களாக; பின்னை இவர் கைவண்மையுடைய பாரி மகளிர்'' (புறம் 202 உரை—உ. வே. சாமிநாதையர் பதிப்பு; 5-ஆம் பதிப்பு சென்னை; 1956; பக்கம் 365) மேற்சொன்ன உரைப்பகுதியிலிருந்து மு. இராகவையங்கார் தன்வேளிர்வரலாற்றில் இருங்கோவேள் எவ்வியின் குடியைச் சேர்ந்தவன் என்று முடிவு கட்டுகின்றார், புறநானூற்றுப் பாடல் 24இலும் அகநானூற்றுப் பாடல்கள் 126. 266 ஆகியவற்றிலும் எவ்வி குறிப்பிடப்படுகின்றான். அவன் மிழலைக் கூற்றத்தின் மன்னன். புறம் 24இல் மாங்குடி கிழாரும் (=மருதனர்?) அகம் 126இல் நக்கீரரும்கூறுவதிலிருந்து மிழலை நெல் வயல்கள் நிறைந்தது என்றும் கடலோரம் அமைந்தது என்றும் அறிகிறோம். பிற்காலச் சோழர்கள், பாண்டியர்கள் ஆகியோரின் கல்வெட்டுக்களில் உள்ள குறிப்புக்களைக் கொண்டு கே. வி. சுப்பிரமணிய ஐயர்[3] மிழலைக்கூற்றம் என்பது வெள்ளாற்றையும், பாம்பாற்றையும் கடலையும் எல்லைகளாக உடைய நிலப்பரப்பு என்று முடிவு செய்கிறார். (வெள்ளாறு மணமேல்குடிக்குச் சற்று வடக்கில் கடலில் கலக்கிறது). சுப்பிரமணிய ஐயர் கருத்துப்படி தஞ்சாவூர் மாவட்டத்தில் அறந்தாங்கி வட்டத்தின் தென்பாதியும், இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்பத்தூர், திருவாடானை வட்டங்களின் சில பகுதிகளும். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருமையம் வட்டமும் மிழலைக் கூற்றத்தில் அடங்கும். ஆனால் இருங்கோவேள் நாடோ குன்றுகள் நிறைந்தது என்று கபிலர் குறிப்பிடுகிறார். எவ்வி காலத்துக்குப்பின் அவர் பின்னோர்கள் இருங்கோவேள் காலத்துக்கு முன் கடலோரமிருந்து குன்றுப்பகுதிக்கு இடம் பெயர்ந்து சென்று விட்டனர் என்று எடுத்துக் கொண்டாலும் இருங்கோவேளின் 49 முன்னோர்களைக் குறிப்பிடும் கபிலர், இருங்கோவேள் எவ்வி குடியைச் சேர்ந்தவனாக இருந்திருப்பின் தம் பாடலில் மிழலையைப் பற்றி யாதொன்றும் கூறாமல் இருந்திரார். இவற்றால் ''எவ்விதொல் குடி''யைச் சேர்ந்தவன் பாரியே என்று துரைசாமி பிள்ளை[4] கூறுவதே ஏற்புடைத்தாகத் தோன்றுகிறது.

---

2. மதுரைத் தமிழ்ச் சங்கம்; இரண்டாம் பதிப்பு, 1916.

3. முதலாம் சடாவர்மன் குலசேகரன் உடைய திருப்புவனம் செப்பேடுகள் (கி. பி. 1214) ''எபிகிராபியா இண்டிகா''—25ஆம் தொகுதி (1939—40 ஆண்டுக் குரியது) பக்கங்கள் 89—106இல் வெளிவந்தது. (புது டில்லி, இந்திய அரசு, 1940 — 8, புறநானூறு'' - இரண்டாம் தொகுதி.

3, இராகவையங்கார் கருத்துப்படி துவரை என்பது கிருட்டிணனின் " த்வாரகை" ஆகும். அதற்கு அவர் கூறும் காரணங்கள் வருமாறு :—

அ) தொல்காப்பியப் பாயிர உரையில் நச்சினர்க்கினியர் கூறுகிறர் :— "அகத்தியனர் ... தென்றிசைக்கட் போதுகின்ற வர்... துவராபதிப் போந்து நிலங்கடந்த நெடு முடி யண்ணல் (அதாவது கிருட்டிணன்) வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண்குடி வேளிர் உள்ளிட்டாரையும் அருவாளரையும் கொண்டு போந்து காடு கெடுத்து நாடாக்கி" (சைவ சித்தாந்தக் கழகப் பதிப்பு, 1944 பக்கம் 10). தொல்காப்பியம் பொருளதிகாரச். சூத்திரம் 32இன் உரையில் நச்சினர்க்கினியர் கூறுவது:— "மலய மாதவன் நிலங்கடந்த நெடு முடியண்ண லுழைநரபதியருடன் கொணர்ந்த பதினெண் வகைக் குடிப்பிறந்த வேளிர்" (சைவ சித்தாந்தக் கழகப் பதிப்பு, 1947, பக்கம் 67) மேற்கண்ட இரண்டு இடங்களிலும் துவரையிலிருந்து வேளிர் போந்தமை குறிப்பிடப் பட்டுள்ளது.

ஆ) வேளிரைப் போல கிருட்டிணன் உடைய யாதவ குலத்தவரும் பதினெட்டு குடியினராக இருந்ததாக மகாபாரதம் கூறுகிறது.

இ) ரோமேசு சந்தர் தத் எழுதிய "பழங்கால இந்தியா வின் நாகரிக வரலாறு" என்னும் நூலின் முதற் பகுதியில் பக்கம் 219இல் கிருட்டிணன் காலத்துக்குப் பிறகு யாதவர்களில் பலர் துவாரகையை விட்டுக் கடல் வழியே தென் இந்தியாவிற்குச் சென்று அங்கு ஒரு புது அரசு நிறுவினர் என்று நம்பப்படுவ தாகக் கூறுகிறர்.

ஈ) கி. பி. 9ஆம் நூற்றுண்டில் தெற்குத் திருவாங்கூரில் ஆட்சி செலுத்தி வந்த கோக்கரு நந்தடக்கன், விக்கிரமாதித்திய வரகுணன் ஆகியோர் தங்கள் குலம் விருட்சுணி குலம் என்று குறிப்பிடுகின்றனர். யது வம்சத்தில் விருட்சுணி குலத்தில்தான் கிருட்டிணன் பிறந்தான். அவ்விரு அரசர்களும் புறநானூற்றில்[5] கூறப்பட்டுள்ள வேள் ஆயின் வழி வந்தவர்களாக இருக்கலாம்.

உ) புறநானூற்றுப்பாடல் 201இன் 8-ஆவது அடியாகிய "நீயே வடபான் முனிவன் றடவினுட் டோன்றி" என்பதன்

5. பாடல் 158 வரி 13. ஆயைப் பற்றிக் கூறும் ஏனைய இடங்கள் புறம் 375 வரி 11 ; அகம் 148' வரி 7.

பழைய உரை "நீதான் வடபக்கத்து முனிவனுடைய ஓம குண்டத்தின் கட்டோன்றி" என்பதாகும். எனவே வடபுலத்து முனிவனுடைய ஓம குண்டத்தில் தோன்றியதாகக் கூறிக் கொண்டவர்கள் துவாரகையில் ஆட்சி செலுத்தி யிருத்தல் கூடியதே.

ஊ) தோர சமுத்திரத்து 6 கொய்சளர் தங்களை யாதவர் வழிவந்தவர்கள் எனக் கூறிக்கொண்டனர். "கொங்கு தேச அரசர்களி"லும் மைசூர் கெசட்டியர் 5ஆம் தொகுதி பக்கம் 335இலும் குறிப்பிடப்படும், சளன் புலியைக் கொன்ற கதையையே புலிகடிமால் என்னும் அடைமொழி சுட்டுகிறது,

4. ஆனல் துரைசாமி பிள்ளையோ துவரை என்பது பிற்கால தோர சமுத்திரமே என்பர். (தற்காலம் மைசூர் மாநிலத்தில் காசன் மாவட்டத்தில் பேளூருக்கு 8 மைல் வடகிழக்கே உள்ள களேபீடு என்பதே முன்பு. தோர சமுத்திரம் இருந்த இடம் ஆகும்.

5. தி. ஆறுமுகநயினர் பிள்ளையின் "நற்குடி வேளாளர் வரலாறு"7 குசராத்தில் உள்ள துவாரகையில் இருங்கோவேளிர் ஆண்டு வந்ததாகக் கூறுகிறது. அந்நூலின் கூற்று எவ்வாறு இவ்வாராய்ச்சிக்குத் தொடர்புடையது என்பது கீழ் பத்திகளில் உள்ளவற்றல் தெளிவாகும். அக்கூற்று அந்நூலாசிரியருக்குத் தெரியவந்த தனிப்பட்ட செவிவழிச் செய்தியை ஆதாரமாகக் கொண்டதோ அல்லது 1920ஆண்டிற்கு முன்னரே வெளியிடப் பட்டுவிட்ட "வேளிர் வரலாற்றின்" கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டதோ தெரியவில்லை. (தனிப்பட்ட செவி வழிச் செய்தியை ஆதாரமாகக் கொண்டதா யிருப்பினும் மிகப்பழங்காலத்தைப்

---

6 "தோர சமுத்திரம்" என்பதே சரியான வடிவம், கீழே பத்தி 7 பார்க்க.

7. 1920ஆம் ஆண்டு மதுரையில் மனோன்மணி விலாசம் அச்சகத்தில் அச்சிடப்பட்டது, அந்நூல் 1036 விருத்தப் பாக்களை உடையது ; அதன் ஆசிரியர் எழுதிய ஏராளமான அடிக் குறிப்புகளையும் உடையது. அந்நூலின் உரைநடை வடிவம் ஒன்று (239 பக்கங்கள்) எஸ், என். அடைக்கலம் பிள்ளையால் எழுதப்பட்டு, மதுரையில் இராமச்சந்திர விலாசம் அச்சகத்தில் இராமசாமிக் கோனரால் 1922ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இக்கட்டுரையில் செய்யுள் நூல் ந. வே. வ. (அ) என்றும் உரை நடை நூல் ந. வே. வ. (ஆ) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. "நற்குடி" என்பதும் "நன்குடி" என்பதும் ஒன்றே.

பற்றியதாயிருப்பதால் அக்கூற்றை ஏற்றுக்கொள்ளுதல் இயலாது) எனினும் அந்நூல் வேளிர் வடபுலத்தவர் என்னும் கூற்றை மறுக்கிறது. "வடவான்" என்பதைப் பிழைபட எழுதியமையாலேயே "வடபான் என்ற பாடம் ஏற்பட்டது என்று அது சாதிக்கிறது. அந்நூலின்படி "வடவான் முனிவன்" என்பது "வடக்கே கல்லால் அடியில் எழுந்தருளியுள்ள முதல்வனாகியசிவன்" ஆகும்; 'தடவு' அல்லது 'தடம்' என்பது "வழி" அல்லது "பரம்பரை" ஆகும். இப்பொருளுக்கு ஏதுவாகச் சிறுபாணாற்றுப்படை வரிகள் 96—99ஐக் காட்டுகிறது ந. வே, வ. (அ). அவ்வரிகளில் "ஆல் அமர் செல்வனை," ஆலமரத்தடியில் அமர்ந்த சிவனை வேள் ஆய் வணங்கி வந்தமை கூறப்படுகிறது.

6. "புலிகடிமாலு"க்கும் ஹொய்சளக் கதைக்கும் ஒரு தொடர்புமில்லை என்று ந. வே. வ. (அ) கூறுகிறது. புலிகடிமாலுக்குப் பொருள் "புலிக் கொடியை யுடைய சோழனையும் நெறி தப்பிற் கண்டிக்க வல்லான்" என்பதே என்கிறது அந்நூல். இருங்கோவேளின் முன்னோர்களிடம் ஆந்திர சாதவாகனரைச் சேர்ந்த புலுமாயி (புலிமெய்) அரசர்களோ அன்றி நாற்புறமும் மலைமுடிகள் சூழ்ந்த இடை நிலங்களைக் கொண்ட மேற்கு மலைத் தொடர்ப் பகுதிக்குக் கிழக்கிலுள்ள புலிநாட்டு (புன்னட்டு)க் கன்னட அரசரோ தோற்ற செய்தியைப் "புலி கடிமால்" என்னும் அடை குறிக்கும் என்பர் துரைசாமி பிள்ளை, மலை மிசை இடை நிலத்தைத் 'தடவு' அல்லது "கோட்டம்" என்று மேற்கு மலை வாழ் மக்கள் கூறுவர் என்பர் அவர்[8] எனினும் அவருடைய இக்கருத்து தோர சமுத்திரமே இருங்கோவேளின் முன்னோர்களுடைய "துவரை" என்றஅவர் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது. அக்கொள்கை ஐயப்பாட்டிற்குரியது என்பது பின்னர் விளக்கப்படும். தற்கால ஆராய்ச்சி அறிஞர் [9]

---

8. புறநானூறு; சைவ சித்தாந்தக் கழகப் பதிப்பு; இரண்டாம் தொகுதி. பக்கம் 4.

9. 1957ஆம் ஆண்டுசென்னையில் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகம் (இந்தியப் பகுதி)யால் வெளியிடப்பட்ட "ஹொய்சளர்கள்" என்னும் தம் நூலில் ஜே. டி. எம்,டெர்ரட், ஹொய்சளக் கதை கி. பி. 1108 முதல் 1142 வரை ஆண்டுவந்த விஷ்ணுவர்த்தனின் காலத்தில் புனையப்பட்ட அருமையான பொய்க் கதையே என்றும், ஹொய்சளர் என்ற விசித்திரமான பெயருக்கு காரணம் கற்பிக்குமுகத்தான் அக்கதை கட்டப்பட்டது என்றும் கூறுகிறார் அவர்மேலும் சொல்வதாவது:— "ஹொய்சள"

கொய்சளக் கதையைப் பொய்க்கதை என்று ஒதுக்கி விடுகின்றனர்; கொய்சளர் தம்மை யாதவ குலத்தோன்றல்கள் எனக் கூறிக் கொண்ட போதிலும் அவர்கள் உண்மையில் யாதவர் வழி வந்தவரன்று என்றும் உரைக்கின்றனர். கொய்சளக் கதையில் வரும்சளனே இருங்கோவேளின் முன்னோன் என்று இராகவையங்

என்பது 'கொய்' (பழங்காலத்தில் பொய்') என்னும் பழங் கன்னட வேர்ச் சொல்லிலிருந்து தோன்றியது. அதன் பொருள் உதைத்தல் என்பதாகும். கருநாடக வரலாற்றில் அக்குலத்தோர் முதன்முதலில் ஏற்றுக்கொண்ட பாத்திரத்தை 'கொய்சளர்' என்னும் பெயர் ஐயத்துக் கிடமின்றிக் காட்டுகிறது. அவர்கள் முதன்முதலில், வெற்றியுடன் கொள்ளையடிக்கும் கும்பல் தலைவர்களாகவே தம் வரலாற்றைத் தொடங்கினர். அந்நூலின் 219 20-ம் பக்கங்களில் பின்வரும் அடிக்குறிப்பைக் காணலாம். 'அள' என்னும் முடிபுக்கு 'பிஜ்ஜள' என்பது ஒரு எடுத்துக்காட்டு. 'பிஜ்ஜள' என்பது 'பிஜ்ஜள' என்றும் அடிக்கடி வழங்கும். அது போல 'கொய்சள'வுக்குப் பதிலாக அச்சொல் வழங்கும் அளவுக்கு 'ஹொய்சன'வும் வழங்கக் காணலாம். 'பொய்சள' என்பதே முதலில் வழங்கிய வடிவம்; தமிழ், கிரந்த, மராத்தி ஆதாரங்களில் 'ஹோசள' 'போசள', 'போசள (Bhocala)'. 'போஜள' 'ஹொயிசள' என்று பலவடிவங்களைக் காணலாம். தற்கால இந்திய ஆசிரியர்கள் சிலர் சிலவேளைகளில் வழங்கும் 'ஹொயசள' 'ஹொய்சாள' 'ஹொய்சள' என்னும் வடிவங்கள் உண்மையான சான்றுகள் எவற்றிலும் காணப்படாத, தவருன வடிவங்கள் ஆகும். பம்பாயில் 1931-ஆம் ஆண்டில் பி எக்ஸ். ஃபர்ட்டாடோ அண்ட் சன்ஸ் ஆல் வெளியிடப்பட்ட 'கடம்ப குலம்' என்னும் நூலில் ஜி. எம். மொரேயிஸ் கூறுவதாவது: "கடம்பர் கி.பி. 11ஆம் நூற்றுண்டில்தான் தங்களை வடவர் வழித் தோன்றல்கள் என்று கூறிக்கொள்ள ஆரம்பித்தனர்.........அக் காலத்தில் தக்காணத்தில் ஆண்டுவந்த அரச குடும்பங்களின் சான்றுகளிலிருந்து அவர்களும் அக்காலத்தில் தாங்கள் வடவர் வழித்தோன்றல்கள் என்றே கூறிக் கொண்டனர் என்பது தெரிகிறது உதாரணமாகத் தூய கருநாடக குலத்தினரான கொய்சளரும் 11ஆம் நூற்றுண்டிலேயே முதன்முதலாகத் தாங்களும் வடவர்களான யாதவர்களின் வழித் தோன்றல்கள் எனக் கூறத் தொடங்கலாயினர். எனவே தங்கள் குலங்களை வடவர் அரசப் பரம்பரைகளோடு இணைத்துக்கூறிக்கொள்ள வேண்டும் என்ற ஒரு பைத்தியம் அக்காலத்தில் தென்னுட்டு அரசர்களைப் பிடித்திருந்தது என்பது தெளிவாகிறது. சுமார் 300 ஆண்டுகள் குன்றிக் கிடந்த தங்கள் ஆட்சியை, வலிமையை அப்பொழுது

•காரும் (அவரைப் பின்பற்றித் தன் "வெள்ளாற்றுப் படுக்கையின் முற்கால வரலாறு" என்னும் நூலில் (சென்னை, 1954) ஆரோக்கிய சுவாமியும்) கூறுவது தவறு என்பதைத் தற்கால ஆராய்ச்சி யாளர் முடிவு நிரூபிக்கிறது

7. "தோர சமுத்திரம்" என்பதே சரியான பெயர்; பொது வாக வழங்கும் 'த்வார சமுத்திரம்' சரியான பெயர் அன்று. எனவே தோர சமுத்திரமே துவரை என்னும் கூற்று வலிவுடைய தன்று. இராட்டிரகூடர் காலதது்த் தலைவனை 'தோரா' என்னும் ஒருவன் சுமார் கி, பி. 800இல் அங்குள்ள குளங்களுள் ஒன்றை வெட்டியதையே "தோர சமுத்திரம்" என்னும் பெயர் குறிக்கிறது. கி. பி. 1047 முதல் 1098 வரை ஆண்ட கொய்சள வினயாதித்யன் சுமார் கி. பி. 1062 வாக்கில் தோர சமுத்திரத்தைத் தன் தலை நகரமாக்கிக் கொண்டான். 'துவராவதி நகரத்தின் உரிமைத் தலைவன்' என்று கொய்சள மன்னன் குறிக்கப்படும்போது யாதவ கிருட்டிணனின் த்வாரகா நகரமே குறிக்கப்படுகிறது. (கொய்சளர் தம்மை யாதவர் வழித் தோன்றல்கள் எனக் கூறிக் கொண்டனர் அன்றோ) த்வாரகா, தோர சமுத்திரம் என்னும் இரண்டு பெயர்களிடையேயும் உள்ள ஒலியொப்புமையை ஆதார மாகக் கொண்டு இரண்டு ஊர்களும் ஒன்று என்று கூறுவதற் காகப் பொய்யான வேர்ச்சொல் ஆதாரம் பயன் படுத்தப்பட்டி ருக்கலாம்[10]

•தான் மீட்டும் நிலைநிறுத்தியிருந்த கடம்பரும் தங்கள் காலத்திய பிற அரசர்களின் கருத்துக்களைப் பின்பற்றித் தாங்களும் தங்கள் குலத்தை நிறுவிய முன்னோன் வடவரிடமிருந்து தோன்றினான் எனக் கதை கட்டிக் கொள்ளலாயினர்,. .,. ., எனினும் கடம்பர் கள் பிராமணராயிற்றே; ஆகவே எவ்வாறாயினும் இறுதியாக அவர்கள் வடவர் வழிவந்தவர்களாகத்தான் இருக்கவேண்டும் என்று வாதிடக் கூடும். ஆனால் இவ்வாதம் சரியல்ல. ஏனெனில் பிராமணர் தென்னாடு புகுந்த பின்னர் திராவிட இனமக்கள் கூடப் பிராமணருட் சேர்க்கப்பட்டனர் என்பது குறித்து ஐயமில்லை. பல நூற்றாண்டுகட்குப் பின்னர் மாதவாச்சாரி யாரும் அவ்வாறு பலரைச் சேர்த்தார். அவ்வாறு பிராமணராக் கப்பட்டு இந்து சமூகத்தில் உயர்நிலை அடைந்த கன்னட நாட்டு மக்களுள் கடம்பரும் ஒருவராவர்.

10. டேர்ரட், 'கொய்சளர்கள்'—பக்கங்கள் 34-ம், 221-ம்

8. இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் வட்டம். மதுரை மாவட்டம் வேலூர் வட்டம் ஆகிய வட்டங்களின் பகுதிகள் அடங்கிய பிரான்மலையை ஒட்டிய நாடு கல்வெட்டுக்களில் துவராபதி நாடு என வழங்கியது என்று இராகவையங்கார் கூறுவர்[11] எனினும் பழைய சான்றுகளில் இவ்வட்டாரத்திற்கு இப்பெயர் வழங்கப்படவில்லை யாகையால் கபிலர் கூறும் துவரை இவ்வட்டாரத்தில் இருந்தது என்று கூறுதற்கிடமில்லை. கபிலர் காலத்திய தமிழ்நாட்டெல்லைகளுக்கு அப்பாலே துவரை இருந்ததாகத்தான் கபிலர் கூறுவதாகத் தெரிகிறது. அத்துவரை குசராத்திலுள்ள துவாரகையா அல்லது தமிழகத்துக்கு அண்மையில் எருமை நாட்டில் (தற்கால மைசூரில்) இருந்த வேறு இடமா என்பதைத் திட்டவட்டமாக்க் கூற இடமில்லை.

9, கபிலர் இருங்கோவேளைச் சந்தித்தபோது அவன் எந் நாட்டை ஆண்டு வந்தான் என்பது இனி அடுத்துக் கவனிக்க வேண்டியது. இராகவையங்காரும் கே. வீ. சுப்பிரமணிய ஐயரும் இருங்கோவேள் எவ்வியின் வழிவந்தவன் என்னும் கருத்துடையவர்கள். எனவே கபிலர் அவனைக்கண்டபோது இருங்கோவேள் மிழலை நாட்டை ஆண்டுவந்தான் என்று இராகவையங்கார் கூறுகிறார். இராகவையங்கார் கருத்துப்படி மிழலை நாட்டில் தற்காலத் தஞ்சாவூர் மாவட்டத்தின் கடலோர வட்டாரங்களும், வெள்ளாற்றுக்குத் தென்பக்கம் இருந்த பாண்டி நாட்டின் சில பகுதிகளும் அடங்கி யிருந்தன.) இருங்கோவேள் கொடும்பாளூரைத் தலைநகராகக் கொண்டு கோனாட்டை ஆண்டு வந்தான் என்பர் சுப்பிரமணிய ஐயர். (கோனாடு, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள குளத்தூர் வட்டம் முழுவதையும் திருமையம் வட்டத்தின் வடபகுதியையும் கொண்டது) திருவிடை மருதூர் அருகே அரைய குளம், கழா அத் தலைமேடு என்னும் இரு ஊர்கள் இருப்பதாகவும், பட்டுக்கோட்டை அருகே மற்றொரு அரைய

11. தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் ; 8-ஆம் தொகுதி: கல்வெட்டு எண் 416 (1903-ஆம் ஆண்டு படி எடுக்கப்பட்ட 130-ஆம் கல்வெட்டு) :- மதுரை மாவட்டம், மேலூர் தாலுகா திருச்சுனையில அகத்தியேசுவரர் கோயிலில் கருவறையின் முன்னுள்ள மண்டபத்தின் வடக்குச் சுவரில் உள்ள கல்வெட்டுப்பகுதி : ஸ்வஸ்தி ஸ்ரீ[திரிபுவனச் சக்கரவர்த்திகள்] ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவர்க்கு யாண்டு நாலாவது... ... துவாரபதி வெளானேன்". அச்சுவரியிலேயே உள்ள மற்றொரு கல்வெட்டு (417 — 1903-ஆம் ஆண்டுபடி எடுக்கப்பட்ட 131 ஆம் கல்வெட்டு) : "பாண்டி மண்டலத்து துவராபதிநாட்டு எறி எட நல்லூரிலிருக்கும்"

குளமும், பட்டணக்காடும் இருப்பதாகவும் இராகவையங்கார் கூறு கிறார். பட்டணக்காட்டில் முன்னர் பழைய நகரம் ஒன்று இருந்த அடையாளங்கள் உண்டென்பர் ஆனால் கபிலர் சந்தித்தபோது இருங்கோவேள் கொற்கையில் இருந்திருப்பான் என்கிறது ந. வே. வ. (அ). கொற்கை பாண்டிய நாட்டின் நடுவில் இருந்தது ; சில காலம் அந்நாட்டின் தலைநகரமாகவும் இருந்தது. இருங்கோவேளே தன்னுரிமையுள்ள தலைவனாகவே கபிலரால் விளிக்கப்படுகிறான். எனவே ந. வே. வ. (அ) கூற்றுப் பொருத்த மாகத் தெரியவில்லை. கொற்கையைச் சுற்றியுள்ள நிலமோ தாமிரபரணியாற்றின் பாசனம் உள்ள சமவெளியாகும். கொற்கையருகே மலைகளே இல்லை, 'பொன்படு மால் வரை'கள் (பொன்விளையும் மலைகள்) இல்லவே இல்லை என்பதைக் கூற வேண்டியதில்லை. கபிலர் காலத்தில் இருங்கோவேள் கொற்கையில் இருந்திரான் என்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும். புதுக்கோட்டை வட்டாரத்திற்கு மேற்கில் உள்ள கோடைமலைத் தொடர் "பொன்படு மால் வரை" எனப்படும் என்றும் அவ்வட்டாரத்தில் உள்ள குன்றுப்பகுதிகளிலேயே கபிலர் காலத்தில் இருங்கோவேள் ஆண்டு கொண்டிருந்திருக்கவேண்டும் என்றும் துரைசாமிப் பிள்ளைக் கருதுகிறார். பின்காலத்தில் நற்குடி வேளாளர் (கீழே பார்க்க) இவ்வட்டாரத்திற்குத் தெற்கே முதுகுளத்தூர் வட்டத்தில் உள்ள செழுவையில் வாழ்ந்து வந்தனர் என்பதும் இருக்கு வேளிர்[12] தலைநகரான கொடும்பாளூர் இவ் வட்டாரத்திலேயே இருந்தது என்பதும் துரைசாமிப் பிள்ளை கருத்துக்கு ஆதரவு அளிக்கின்றன. 'பொன்படு மால்வரையைக் கபிலர் குறிப்பிட்டிருப்பதிலிருந்து எருமை நாட்டில் தற்காலம்

(தொடரும்)

12. இருக்குவேள் என்பது இருங்கோவேளின் மரூஉ. "வெள்ளாற்றுப் படுகையின் முற்கால வரலாற்றில்" ஆரோக்கிய சாமி 'இருக்குவேளி'ல் இருந்து 'இருங்கோவேள்' தோன்றி இருக்க வேண்டும் என்று கூறுவது பொருந்தாது. தமிழ் நாட்டில் ஆரிய வந்தேறிகள் புகுந்தபின் பெயர்களையும் பிறவற்றையும் சம்சுகிருத மயமாக்கவேண்டும் என்ற பைத்தியத்தைத் தீவிரமாகப் பரப்பினார்கள், இதன் காரணமாகவே "ரிக்" வேதத்தோடு தொடர்பு படுத்தும் நோக்கத்தோடு இருங்கோவேளை இருக்குவேள் என்று மாற்றி யிருக்கவேண்டும். இருங்கோவேள் என்னும் பெயர் பல காலங்களிலும் பல் இடங்களிலும் பயின்று வந்துள்ள பெயராகும். (கவனிக்க :— புற நானூற்று. அக நானூற்றுப் பாடல்களிலுள்ள குறிப்புகள் ; மைசூரிலுள்ள

(தொடரும்)